
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**996**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

**27**

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வு பூர்வமாக விவரிக்கும் தொடர்!

# பெண்களுக்கான சொத்துரிமை
# சட்ட விடியல் தந்த தலைவர் கலைஞர்!

*1970*-ஆம் ஆண்டு, இந்திராகாந்தி அமைச்சரவையில் மக்கள் நலத்துறை அமைச்சராக இருந்த டாக்டர் சந்திரசேகர், தந்தை பெரியாரை சந்தித்தார். அப்போது "மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகிறது அய்யா, எப்படிக் கட்டுப்படுத்துவது என்று ஒன்றும் புரியவில்லை; ஏதேனும் யோசனை சொல்லுங்கள்" என்று பெரியாரிடத்தில் கேட்டுள்ளார். அதற்கு பெரியார் "ஏன் இவ்வளவு சிரமப்படுகிறீர்கள்; பெண்களுக்கும் தகப்பன் சொத்தில் சமபங்கு உள்ளது என்று அறிவித்து விடுங்கள்; மக்கள் தொகை தானாக குறைந்து விடும்" என்று கூறுகிறார். உடனே சந்திரசேகர் அவர்களும் "எப்படி அய்யா! எனக்கு ஒன்றும் புரியவில்லையே, பெண்களுக்கு சொத்தில் சமபங்கு கொடுத்தால் மக்கள் தொகை எவ்வாறு குறையும் ?" என்று கேட்டுள்ளார்.

உடனே பெரியார் சொன்னாராம் "ஆமாம் அய்யா, இந்த சமூகத்தில் ஒரு ஆண்தான் தனது சொத்துக்கு வாரிசாக வர முடியும் என்ற சட்டம் உள்ளது. அதனால்தான் ஆண் குழந்தை பிறக்கும் வரை தொடர்ந்து குழந்தை பெற்றுக் கொள்கின்றனர். அப்படியும் பிறக்கவில்லை என்றால் இரண்டாம் திருமணம் செய்தாவது பெற்றுக் கொள்கின்றனர். இப்போது பெண்களுக்கும் சொத்தில் சமபங்கு உள்ளது என்று சட்டம் கொண்டுவந்து அறிவித்து விட்டால் ஒரு பெண் குழந்தை பிறந்தாலே நிறுத்திக் கொள்வார்கள். அப்படி செய்தால் பெண்களுக்கு சொத்தில் சமபங்கும் கிடைக்கும், அவர்களுக்கு மதிப்பும் கூடும், பெண் சிசுக் கொலைகளும் தடுக்கப்படும்" என்று அறிவு நுட்பமாக பெரியார் அவர்கள் பதில் கூறியுள்ளார்.

தந்தை பெரியார் குறித்த கருணானந்தம் தொகுத்துள்ள பெரியார் வாழ்க்கை வரலாற்று நூலிலும், கழகத்தின் இணையதளத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த தகவல், பெண்ணுரிமை சார்ந்து பெரியாரின் நுட்பமான பார்வையினை உணர்த்துகிறது இது. குறிப்பாக, வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி 1924ஆம் ஆண்டுக்கு பின்னர் பெரியாரின் எழுத்துக்களிலும், பேச்சுக்களிலும் பெண்ணுரிமை குரல் தவிர்க்காமல் இடம்பெற்று வந்தது.

### முதல் சுயமரியாதை மாநாட்டு முழக்கம்!

அந்த முழக்கம் மிக வலுவாக 1929 செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டில், பல தீர்மானங்களாக வெளிவந்தது. “மதத்தின் அடிப்படையில், ஜாதியின் அடிப்படையில், பாலினத்தின் அடிப்படையில் உயர்வு - தாழ்வு கூடாது. பிறப்பின் அடிப்படையில் உயர்ந்தவரும் இல்லை - தாழ்ந்தவரும் இல்லை” என்கிற மிக முக்கியமான திராவிட சிந்தனை கோட்பாட்டினை முன்வைத்தது. அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட புரட்சிகரமான தீர்மானங்களில் ஒன்றுதான் பெண்களுக்கு சொத்துரிமை வேண்டும் என்பது. “பெண்கள் பருவமெய்துவதற்கு முன்பே திருமணம் செய்து வைக்கும் பழக்கம் நடைமுறையில் இருந்த அந்த காலத்தில், பெண்கள் திருமண வயதை 16-ஆக உயர்த்த வேண்டும். பெண்களுக்கு கலப்பு மண உரிமை, விவாகரத்து உரிமை, மறுமண உரிமை வழங்கப்பட வேண்டும். சொத்துரிமை; உத்தியோக உரிமை வழங்கப்பட வேண்டும்” என பல முக்கியத் தீர்மானங்களை செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றினார் பெரியார்.

மதம் மற்றும் சமூகத்தின் அடிப்படையில் இயற்றப்பட்டது. இந்த சட்டங்களில், ஆண்களுக்கு இருந்த பல சட்ட உரிமைகளால், பரம்பரைச் சொத்து மற்றும் கூட்டுக் குடும்பச் சொத்தில் பெண்கள் உரிமை கோர முடியாது. இந்த இரண்டு சட்டங்களும் பெண்களுக்கு முழுமையான சொத்துரிமையை வழங்குவதாக இல்லை. குறிப்பாக, சட்டபூர்வமாக உரிமைகள், சட்டபூர்வமான வடிவங்களிலேயே



ஓவியம் : ரவி பேலட்

பெண்கள் சொத்தில் உரிமை கோர முடியாது என்பதுதான் 1937-ஆம் ஆண்டு வரை இருந்த நிலைமை. சுயமரியாதை இயக்கத்தின் கோரிக்கைகளால் 1937-ஆம் ஆண்டில் இந்து பெண்கள் சொத்துரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் கணவன் உயிரோடு இருக்கும் வரை பெண்கள் சொத்துக்கு உரிமைதாரர் ஆக முடியாது. ஒருவேளை மனைவிக்கு முன்பே கணவர் இறந்துவிட்டால், அவருடைய சுய சம்பாத்திய சொத்துகளிலும், பங்குரிமைச் சொத்திலும் மனைவிக்கு உரிமை வழங்கப்பட்டது. ஆனாலும் அவை நடைமுறையில் பெரும்பாலும் மகன்களுக்கே சென்றன.

### அண்ணல் அம்பேத்கரின் அறச்சீற்றம்

"பெண்களுக்குச் ‘சீதனம்’, ‘வரதட்சணை’ ஆகிய பெயர்களில் கொடுக்கப்படும் வேறுபட்ட நடைமுறைகள் மாற்றப்பட்டு, அவளுக்குரிய சொத்து என்பது நடைமுறைக்கு வர வேண்டும்" என்று 1950-ஆம் ஆண்டில் புரட்சியாளர் அம்பேத்கர் நாடாளுமன்றத்தில் ஒரு சட்டமுன்வடிவை கொண்டுவந்தார். ஆனால் பலத்த எதிர்ப்புகளால் அந்த சட்ட முன்வடிவு முறியடிக்கப்பட்டது. அடுத்து, 1956ஆம் ஆண்டு வாரிசுரிமைச் சட்டம் மறுக்கப்பட்டன. இதற்காக நடத்தப்பட்ட பல வழக்குகள், வாதங்கள் அனைத்தும் இந்து ஆரியம் முன்வைத்த பழமை வாதங்கள் என்பதை பெரியாரும், அண்ணல் அம்பேத்கரும் பல குறிப்புகளில் சொல்கின்றனர்.

> **“ தந்தை பெரியாரும், அண்ணல் அம்பேத்கரும் சாதிக்க விரும்பியதை, ‘சமத்துவம் பேசிய கொள்கைத் தலைவர்கள் உருவாக்க விரும்பிய அந்த மாற்றத்தை’ அவர்கள் வழியில் ஆட்சி நடத்திய கலைஞர் நிறைவேற்றிக்காட்டினார். ”**

### ஆணுக்குப் பெண் சமம்

பரம்பரைச் சொத்தில் பெண்ணுக்கும் சமபங்கு கொடுக்கப்படும்போதுதான் ஆணுக்கு பெண் சமம் என்ற உணர்வு ஆண்கள் மத்தியிலும் ஏற்பட வழிவகுக்கும். எனவே அத்தகைய தொரு சட்டத்தை உருவாக்கும் நாள் எந்நாளோ என்பதே பெரியாரின் ஏக்கமாக இருந்தது. புரட்சியாளர் அம்பேத்கருக்கும் அதுவே எண்ணம். பெண்களுக்கு சொத்துரிமை வழங்க வேண்டும் என சட்டம் இயற்ற விரும்பி அது நிறைவேறாமல் போனபோது தான், தனது சட்ட அமைச்சர் பதவியை தூக்கி எறிந்தார் அண்ணல் அம்பேத்கர். “பின் நாட்களில் ஒரு தலைவன் உருவாகி இந்த கொள்கைகளை சட்டமாக்குவார்” என்று கனவு கண்டனர், இந்தியாவுக்கே சமூகநீதி வகுப்பெடுத்த அந்த தலைவர்கள்.

அவர்கள் கனவு கண்ட அந்தத் தலைவர் வேறு யாருமல்ல. முத்தமிழறிஞர் கலைஞர் என்பதுதான், காலம் தமிழ்நாட்டுக்கு அளித்த நல்வாய்ப்பு. தந்தை பெரியாரும், அண்ணல் அம்பேத்கரும் சாதிக்க விரும்பியதை, ‘சமத்துவம் பேசிய கொள்கைத் தலைவர்கள் உருவாக்க விரும்பிய அந்த மாற்றத்தை’ அவர்கள் வழியில் ஆட்சி நடத்திய கலைஞர் நிறைவேற்றிக் காட்டினார். அதுதான், பரம்பரை சொத்தில் பெண்களுக்கும் பங்கு உண்டு என்கிற சட்டம்.

1989ஆம் ஆண்டில் அந்த சட்டத்தினை சாதித்துக் காட்டினார் கலைஞர். அப்போது சட்டமன்றத்தில் பேசிய அவர், “1929ஆம் ஆண்டில் செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தை 60 ஆண்டுகள் கழித்து என்னுடைய 65-ஆவது வயதில் சட்டமாகக் கொண்டுவருகிற வாய்ப்பை பெற்றிருக்கிறேன் என்பது எனக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், இந்த அவைக்கும் பெருமை சேர்க்கக்கூடியது. என்றாலும், 60 ஆண்டுக்காலம் நாம் தூக்கத்திலே இருந்திருக்கிறோம் என்பதையும் மறந்துவிடுவதற்கு இல்லை.” என்றார்.

பெண்களுக்கான ஓர் உரிமையை நிலைநாட்ட, இந்தியா 60 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. அதற்கு இடையில்தான் எத்தனை எத்தனை சட்டப் போராட்டங்கள். 1989 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்ட பின்னரும், சட்டப் போராட்டங்கள் ஓயவில்லை. 2020 ஆம் ஆண்டு வரை உச்சநீதிமன்றத்தில் அந்த வழக்குகள் தொடர்ந்தன.

...தொடரும்

---

## மற்றுமொரு வாக்காளர் பட்டியல் மோசடி!

**வா**க்கு மோசடிகள் மூலமே பாரதிய ஜனதா கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது என காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தி பெரும் பிரச்சார இயக்கத்தையே முன்னடுத்தார். பீகார் மாநில தேர்தலில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் என்கிற பெயரில், பல லட்சம் வாக்காளர்களை நீக்கிவிட்டு தேர்தலை சந்திப்பது என பாஜக பல வகைகளில் ஜனநாயகப் படுகொலைகளை செய்து வருகிறது. இந்த நிலையில், மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ளாட்சித் தேர்தல் வாக்காளர் பட்டியல் மோசடி பூதாகரமாக வெடித்துள்ளது.

மகாராஷ்டிராவில் விரைவில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், சமீபத்தில் நவநிர்மாண் சேனா நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய, அக்கட்சியின் தலைவர் ராஜ் தாக்கரே இது தொடர்பாக பல அதிர்ச்சிகரமான தகவல்களை தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, கடந்த ஜூலை மாதம் மகாராஷ்டிராவின் வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் முடக்கியதாகவும், அதன்பின்னர், வாக்காளர் பட்டியலில் சுமார் 96 லட்சம் போலி வாக்காளர்களை சேர்த்திருப்பதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மும்பை, புனே, நாசிக், தானே போன்ற மகாராஷ்டிராவின் முக்கிய நகரங்களில் போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். ஒவ்வொரு நகரத்திலும் எட்டு முதல் எட்டரை லட்சம் போலி வாக்காளர்களை சேர்த்திருக்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக, நவம்பர் 1ஆம் தேதி மும்பையில் காங்கிரஸ், சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், நவ நிர்மாண் சேனா ஆகிய கட்சிகள் கூட்டாக மாபெரும் கண்டன பேரணி நடத்தத் திட்டமிட்டுள்ளன.

முறைகேடு நடந்திருப்பதாக, தேர்தல் ஆணையம் மீது எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டினால், ஆளும் பாஜகவினர் பதில் அளிக்கின்றனர். பாஜகவின் ஜனநாயகப் படுகொலைகளை அம்பலப்படுத்தினால் தேர்தல் ஆணையம் பதிலளிக்கிறது. எதிர்க்கட்சிகளின் குரல் வலுவாக வேண்டும்!

---

## ஃப்ளாஷ்பேக்



### தி.மு.கழகக் குடும்பம் என்பதில் பெருமை!



விமலாதித்தன் மணி

**எ**ன் தாய் வழித் தாத்தா, எஸ். நல்லசாமி அவர்கள் கரூர் கழக முன்னோடி. எஸ்.என் என்று சுருக்கமாக அழைக்கப்பட்டவர். 1971-ஆம் ஆண்டில் கரூர் சட்டமன்றத் தொகுதியில் முதன்முதலாக கழகத்தின் சார்பில் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினரானவர். தொடக்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் செயல்பட்டு வந்தவர். தோழர்கள் ஜீவானந்தம், பி.ராமமூர்த்தி, கல்யாண சுந்தரம், உமாநாத், பி.ஆர்.சி என முக்கிய இடதுசாரி தலைவர்களின் நெருங்கிய நண்பராக அறியப்பட்டவர். கழக முன்னோடி அன்பிலார் அவர்களின் நெருங்கிய நண்பர். இந்த படம் அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது தலைவர் கலைஞர் அவர்களுடன் எடுக்கப்பட்டது. அன்பிலார் உடன் இருக்கிறார். நாங்கள், தி.மு. கழக குடும்பத்தினர் என்று சொல்லிக் கொள்வதுதான் என்றென்றைக்கும் பெருமை.

**– விமலாதித்தன் மணி,**
**சைபர் பாதுகாப்பு நிபுணர், வளைகுடா வாழ் தமிழர்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## நம் வரலாறு

### கலைஞர் தொகுதி அலுவலகம்!

1996 தி.மு.க ஆட்சி காலத்தில் தமிழ்நாட்டில் 234 தொகுதிகளிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகம் கட்டுவதற்கான திட்டத்தினை அறிவித்திருந்தார் கலைஞர். அந்தத் திட்டத்தின்படி, பல தொகுதிகளிலும் அலுவலகங்கள் கட்டப்பட்டு திறக்கப்பட்டன. கலைஞர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த சேப்பாக்கம் தொகுதியில் கட்டப்பட்ட அலுவலகத்தை 2002 ஆம் ஆண்டு மார்ச் 7-ஆம் தேதி திறந்து வைத்தார் கலைஞர். அந்த அலுவலகம் கட்டப்பட்ட மறுநாளே அந்த பகுதியைச் சேர்ந்த எதிர்க்கட்சி கும்பல் ஒன்று அலுவலகத்தை சேதப்படுத்தி அராஜகம் செய்து சென்றது. அடுத்த நாள் அந்த அலுவலக வாசலிலேயே உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார் கலைஞர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131